## பதியத்தலாவ பிரதேச சபை
## அம்பாறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதியத்தலாவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினனயும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியின் போது பௌதீக இருப்புக் காணப்படாத போதிலும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் ரூபா 114,240 இருப்புப் பெறுமதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் பேணிச் செல்லப்பட்ட பேரேட்டின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 146,966,860 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிடமாக ரூபா 589,237,227 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 442,270,367 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 120,000 பெறுமதியான 02 கணனி இயந்திரங்கள் கணக்கீடு செய்யப்படாமையால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் போது சபையினால் நூலகத்திற்காக 18 புத்தக இறாக்கைகளை பொருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 653,400 தொகை கணக்கீடு

செய்யப்படாமையினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 1,268,707 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீகஸ்வத்த சிறுவர் பூங்காவின் சந்தை மற்றும் நடமாடும் வியாபாரக் கொட்டகை என்பன நிலையான சொத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குரிய ரூபா 9,241,884 பெறுமதியான சிறியரக கெப் வண்டி மற்றும் டிப்பர் வாகனம் என்பன சபையின் சொத்தாக மூலதனமாக்கப்படாமையினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) சபைக்குரிய பெகோ லோடர் மற்றும் கெப் வண்டி என்பவற்றின் உள்ளபடியான பெறுமதி ரூபா 25,549,179 ஆக இருந்த போதிலும், கணக்குகளுக்கு ரூபா 8,350,000 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் ரூபா 17,199,179 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | பிரதேச சபை விதிக்கோவை | |
| | விதி 59-66 | ஒவ்வொரு ஆண்டினதும் ஆரம்பத்தின் போதும் பிரதேசத்தில் மெய்மையாய்வை மேற்கொண்டு கைத்தொழில் வரி அறவிட வேண்டிய நிறுவனம் இனங்காணப்பட்டு அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | விதி 65 | வருமான எழுது வினைஞரினால் செலுத்துதல்களைப் புறக்கணித்தவர்களின் பெயர்ப்பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | விதி 153 | வருமான நிலுவைப் பணம் தொடர்பான கூற்றொன்று பீ.எஸ் 07 மாதிரி படிவத்தின் பிரகாரம் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| | விதி 180 | காசு, களஞ்சியம் மற்றும் வருமானம் சேகரித்தல் போன்ற செயற்பாடுகளில் பொறுப்பாக செயற்படுகின்ற மூன்று உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3:9:1 இன் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக |

| | |
|---|---|
| | நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது உரிய சமூக அடிப்படை அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற மொத்த ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 02 மில்லியனை விஞ்ச முடியாதிருந்ததுடன் ஒரே தடவையில் 03 ஒப்பந்தங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் வழங்க முடியாதிருந்த போதிலும், சபையினால் நாவின்ன சமூக அமைப்புக்கு ரூபா 3,899,946 பெறுமதியான 12 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (இ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 (03.01) | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வேலைச் செயற்பாடுகளின் நிதிவிளைவுகள் ரூபா 783,834 தொகையான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 1,110,362 ஆன மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 326,528 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம் போன்ற மூலகங்களில் 28 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், வீத வரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமான உதவிகள் போன்ற மூலங்களில் 0.5 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது சம்பளமும் படிகளும், வழங்கல்களும் உபகரணங்களும், மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தலும் பராமரிப்பும், ஓய்வூதியம் போன்ற மூலங்களில் 01 சதவீதம் முதல் 252 சதவீதம் வரையிலான அதிகரிப்பும், பிரயாணச் செலவினம், போக்குவரத்து, தொடர்பாடல் மற்றும் மானியம் போன்ற மூலங்களில் 07 சதவீதம் முதல் 46 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான விடயம் | 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2016 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| ஆதன வரி | 161,000 | 65,450 | - |
| வாடகை | 3,929,300 | 2,333,900 | 79,100 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 397,000 | 378,800 | - |
| சேவைகளுக்கான கட்டணம் | 3,075,904 | 1,404,218 | - |
| தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும் | 769,000 | 588,478 | 375,664 |
| ஏனைய வருமானம் | 202,550 | 318,426 | 24,115 |

**2.3.2 வாடகை**

2005 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய இறைச்சிக் கடை வாடகையான ரூபா 24,115 தொகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.3 ஏனைய வருமானம்**

2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் ஒரு தொலைபேசி கோபுரத்திற்காக அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஆகக் குறைந்தது ரூபா 20,000 வீதம் அறவிட வேண்டியிருந்த போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் 08 தொலைபேசி கோபுரங்களுக்காக ரூபா 160,000 தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 முத்திரைக் கட்டணம்**

2010 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 161,282 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரம் குறித்த திகதியில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் தண்டப் பணமாக ரூபா 10,265 தொகையைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) சபையில் சேவையாற்றி இடம் மாற்றலாகிச் சென்ற இரண்டு ஊழியர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 13,960 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதியத்தலாவ வாராந்த சந்தைக்கு முன்பக்கம் மேல் மாடியில் 11 கடைகளையும் சேரன்கட பொது சந்தைக் கட்டிடத்தொகுதியில் 02 கடைகளையும் நிர்மாணித்தல்

மீளாய்வாண்டின் போது பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான 19 வாகனங்களில் 12 வாகனங்களுக்காக வருடாந்த வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான கெப் வண்டியை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக 2014 யூலை 19 ஆந் திகதி முதல் அம்பதென்ன இயந்திரப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை பழுதுபார்த்துக் கொள்வதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற மொத்தப் பரப்பான 04 ஏக்கர், 103 பேர்ச் அளவான 05 காணிகளின் உரித்தை சபையின் பெயருக்கு கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 08 வாகனங்கள் பழுதுபார்க்கக் கூடிய நிலையில் காணப்பட்ட போதிலும், 2017 யூன் 13 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்க்காமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட 09 வாகனங்களை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

நேர் ஊழிய அடிப்படையில் செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2015 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்களுக்கான மூலப்பொருட்கள் மற்றும் உள்ளீடுகள் கொள்வனவு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட விலை வீதத்தின் பிரகாரமான கூறுவிலைக்கும் உள்ளபடியாக செலவிட்ட செலவினத்திற்கும் இடையே ரூபா 2,162,590 மிகைச் செலவினமொன்று காணப்பட்டதுடன் அது செலவிட வேண்டிய செலவினத்தில் 41.8 % சதவீதத்தைக் கொண்டிருந்தது.

| விடயம் | சபை செலவிட்ட செலவினம் | சபை செலவிட வேண்டிய செலவினம் | மிகைச் செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| மணல் | 1,117,300 | 864,200 | 253,100 |
| கொங்கிறீட் கலவைக் கல் (மெட்டல்) | 3,179,925 | 2,415,375 | 764,550 |
| மோட்டார் கிறேடர் | 3,037,800 | 1,892,860 | 1,144,940 |
| மொத்தம் | 7,335,025 | 5,172,435 | 2,162,590 |

(ஆ) சந்தையில் காணப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையின் பிரகாரம் பிலர் லீற்றரொன்று ரூபா 212 ஆக இருந்ததுடன், அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட 104 லீற்றர் பிலருக்கு செலவிட வேண்டிய ஆகக்கூடிய தொகை ரூபா 22,048 ஆக இருந்த போதிலும், சபையினால் ரூபா 76,200 செலவிட்டதன் மூலம் ரூபா 54,152 மிகைச் செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சீமெந்து கொள்வனவின் போது ஒரே நாளில் சில விலை எண்ணிக்கையில் சீமெந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் மூலம் சபைக்கு ஆகக் குறைந்தது ரூபா 53,660 அளவிலான நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 01 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சொத்துக்களை கணக்குகளுக்கு கொண்டு வருதல். |
| (ஆ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடுதல். |
| | ii. உப விதிகளை விதித்தல் |
| | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | சுற்றறிக்கையின் பிரகாரம் வேலைகளை நிறைவேற்றுதல் |
| (ஈ) களஞ்சிய நிர்வாகம் | விரைவாக சரி பிழைகளை கண்டறியக் கூடிய முறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல் |
| (உ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்றல் |